Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 330/2019 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | டாக்டர் எஸ் கண்ணன் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 4th day of March 2021.

சாட்சி 'Thermal Screening' பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபின் நீதிமன்றத்திக்குள் அனுமதிக்கப்ட்டு விசாரணை மேற்கொள்ளப்படுகிறது. சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

முதல் விசாரணை :

நான் தற்போது பொள்ளாச்சி அரசு மருத்துவமனையில் கண்காணிப்பாளராக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். நான் மேற்படி கண்காணிப்பாளராக இருந்தபோது கோவை மாவட்ட இணை இயக்குநர் பொறுப்பு வகித்துவந்தேன். கடந்த 20.07.2017 அன்று YEGO Vanish ஆயுர்வேத சென்டர் வடசித்தூரில் உள்ளது. எதிரி முத்துலட்சுமி முறையான மருத்துவர் படிப்பு இல்லாமல் ஆங்கில மருத்துவர் சிகிச்சை அளித்துவருவதாக எனக்கு தகவல் கிடைத்து மாலை சுமார் 4.45 மணிக்கு மேற்படி எதிரியின் ஆயுர்வேத மையத்திற்கு சென்று அவரை விசாரித்து ஆய்வு செய்தேன். அவருடைய மருத்துவ படிப்பு சான்றிதழை ஆய்வு செய்ய கேட்டேன். முறையான மருத்துவ சான்றிதழ் எதனையும் அவர் என் முன் சமர்பிக்கவில்லை. எதிரி நடத்திவந்த ஆயுர்வேத மையத்தில் உள்ள மருந்துகளை ஆய்வு செய்துகொண்டிருந்தபோது எதிரி அங்கிருந்து தப்பித்து சென்றுவிட்டார். பின்பு அங்கிருந்த ஆங்கில மருந்துகள் 15 அவையாவன, Texalab, Injection Chlor, Injection chloravil . Injection Meblex உட்பட்டவை அத்துடன் ஸ்டெத்தாஸ்கோப், ஸிரன்ஞ் ஆகியவற்றையும் பறிமுதல் செய்து அவற்றை நெகமம் காவல்நிலையத்தில் போலிசார் வசம் ஒப்படைத்தேன். எதிரி முத்துலட்சுமி முறையான படிப்பு இல்லாமல் ஆங்கிலம் மருத்துவம் அளித்துவருவதை நெகமம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த புகார் அதசாஆ.1. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் மருந்துகள்தான் அங்கிருந்து நான் கைபற்றி போலிசார் வசம் ஒப்படைத்தவை. சலைன் அசாபொ.1, ஸ்ரன்ஞ்சுகள் - அசாபொ.2, Ofloare Injection – அசாபொ.3, Injection zimenac injections – அசாபொ.4, Vitamin Complex B injection 30 ml அசாபொ.5 , dexalav injection 2 counts) – அசாபொ.6, Mbplex 2 counts – அசாபொ.7, chlorvil injection 2 counts 30 ml – அசாபொ.8, ChlorMB injection 30 ml - அசாபொ.9 , Ligno injection 1 30 ml - அசாபொ.10, Paracetomol 50 counts -4 strips – அசாபொ.11, Phentor injection 2 counts – அசாபொ.12, Eldonac மாத்திரைகள் 30 எண்ணிகைகள் -3 strips – அசாபொ.13 Stethoscope - அசாபொ.14. போலிசார் இதுசம்பந்தமாக என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை இல்லை

ஒம்/- க.செல்லையா,பிஏ.,பிஎல்.,

நடுவர் நீதிமன்றம் எண்.2
பொள்ளாச்சி